''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 16/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, நிறைவேற்றப் பெற்றது.

12-35 மணி

(இ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1990.

திரு எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 15/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 14/1990)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

---

* 19-4-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.